# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் - 13.05.2026</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 7299/F/2024</u>**

திரு.மு.ரவிசங்கர் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர் /
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு நகர்ப்புற
வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-5,
130, ஆர்.கே.மடம் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை-600 004. .. பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.மு.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.P.பிரபாகரன், கண்காணிப்பாளர், நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-5, சென்னை அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 09/03/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் சென்னை மாவட்டம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9, வார்டு-126, பகுதி-25, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான ஆண்டி மானிய தோட்டம், சிவராமன் தெரு

திட்ட பகுதியில் இருந்து எத்தனை வீடுகள் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது விவரம் என்பன போன்ற 4 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை என மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 13.04.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை. இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 31.05.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 26.09.2024 தேதியிட்ட கடிதத்தின் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட ஆவணங்கள் ஏற்புடையது அல்ல எனக் கருதி இவ்வாணையம் கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

- **“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவலை உரிய காலத்தில் வழங்காத (09.03.2024 தேதிய) அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்/ கண்காணிப்பாளர், நிர்வாகப்பொறியாளர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-5, சென்னை-4 அவர்களுக்கு சட்ட பிரிவு 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 18.06.2026 அன்று அப்போதைய பொதுதகவல் அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது”.**
- **“மனுதாரரின் 13.04.2024 நாளிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு தகவல் வழங்காத அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் (13.04.2024 தேதிய) அவர்களுக்கு சட்ட பிரிவு 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 18.06.2026 அன்று அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது”.**

- **“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கும் சரியான முழுமையான தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 7(6)ன் கீழ் கட்டணம் ஏதுமின்றி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது என்ற முத்திரையுடன் பொதுத்தகவல் அலுவலர் கையொப்பமிட்டு மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் மனுதாரருக்கு வழங்கிய தகவல் ஆகியவற்றை இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் 18.06.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது”.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7299/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர் /
கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு நகர்ப்புற
வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-5,
130, ஆர்.கே.மடம் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

**அப்போதைய பொதுதகவல் அலுவலர்**,
தமிழ்நாடு நகர்ப்புற
வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-5,
130, ஆர்.கே.மடம் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர்,**
தமிழ்நாடு நகர்ப்புற
வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோட்டம்-5,
130, ஆர்.கே.மடம் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.
**(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)**

**மேல்முறையீட்டாளர்:-**

திரு.ரவிசங்கர்,
23, பாரதி நகர்,
மந்தைவெளிபாக்கம்,
சென்னை-600 028.

**நகல்**
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்,
எண்.5, காமராஜர் சாலை,
சென்னை-5.

Copy to file: KR/PA